# தேசிய மீன் தொழிலாளர் அமைப்பு

# National Fishworkers Forum 28223630

### சுவாமிநாதன் குழு பரிந்துரைகளின் (இறுதி வடிவம்) மீதான எங்கள் நிலைபாடுகள்

Positions on the recommendations of the Swaminathan Committee (*Final Frontier*)

**அத்தியாயம் 5: கடற்கரை மேலாண்மை அறிவிக்கையைக் கைவிடுவது, கடற்கரை ஒழுங்கமைவு மண்டல விதிகள் 1991க்குச் திரும்பச்செல்வது மற்றும் திருத்தங்களுடன் அதனை வலுப்படுத்துவது.**

*ஒப்புக்கொள்கிறோம்*

*தேசிய மீன் தொழிலாளர் அமைப்பு இந்தப் பரிந்துரையை ஒப்புக்கொள்ளும் அதேசமயம், கடற்கரை ஒழுங்கமைவு மண்டல (CRZ) அறிவிக்கைக்கு இதுவரை செய்யப்பட்ட 25 திருத்தங்கள் பற்றி இக்குழு மௌனம் சாதிப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அந்த 25 திருத்தங்களும் இரத்து செய்யப்பட வேண்டும் என்றும் அறிவிக்கை அதன் 1991 வடிவத்திற்கு கொண்டுசெல்லப்பட வேண்டும் என்றும் நாங்கள் கோருகிறோம்.*

**7.1 மேம்படுத்தப்பட்ட விண்வெளி தொழில்நுட்பம், வலுவூட்டப்பட்ட நிறுவனங்கள், கட்டுப்படுத்துதல் மற்றும் சட்ட அமைப்புகளைப் பயன்படுத்தி CRZ அத்துமீறல்களைத் தடுத்தல்.**

*ஒப்புக்கொள்கிறோம்.*

*முக்கியமான தகவல்கள் பொதுமக்களுக்குக் கிடைக்கும் இடத்தில் இல்லை என்பதையும் தகவல்களைப் பெறுவது மிகவும் கடினமாக இருக்கிறது என்பதையும் NFF சுட்டிக்காட்ட விரும்புகிறது. மாநிலங்களின் கடற்கரை மண்டல மேலாண்மைத் திட்டங்கள் (State CZMPs), இதுவரை எல்லை குறிக்கப்பட்ட பகுதிகளின் உயரலைக்கோடு (HTL), CRZ 1 பகுதிகள், அலையாத்திக் காடு பகுதிகளுக்கான வனக்கோட்டங்களின் திட்டங்கள் போன்றவை பற்றிய தகவல்களை பொதுமக்கள் அறிவது சிரமமாக இருக்கிறது. இந்த அனைத்துத் தகவல்களையும் பொதுமக்கள் அறிய முன்வைக்க வேண்டும் என்றும் மீனவ மக்களும் சுற்றுச்சூழல்வாதிகளும் அத்துமீறல்கள் நடக்கும்போது விழிப்பாக இருப்பதற்கு உதவ வேண்டும் என்றும் NFF கோருகிறது.*

**7.1.2: கண்காணிப்பு மற்றும் அமுலாக்கத்தில் மாநில கடற்கரை மண்டல மேலாண்மை அதிகார அமைப்புகளுக்கு *(SCZMAs)* நேரடி பாத்திரம்; ஒப்புதல் அளிப்பதை சுற்றுச்சூழல் துறையோ அல்லது மாநில சுற்றுச்சூழல் மதிப்பீடு குழுவோ *(State Environment Appraisal Committee)* மேற்கொள்ளலாம்.**

*ஒப்புக்கொள்ளவில்லை*

*பின்வரும் காரணங்களால் NFF இந்த முன்வைப்பை ஒப்புக்கொள்ளவில்லை.*

- ?? *ஒப்புதல் அளிப்பதை சுற்றுச்சூழல் துறையிடம் அளிப்பது ஒப்புதல் அளிக்கப்படுவதை மக்கள் கண்காணிப்பதற்கான வாய்ப்புகளைக் குறைக்கும்.*

?? *மாநில கடற்கரை மண்டல மேலாண்மை அதிகார அமைப்புகளைப் (SCZMAs) பலவீனப்படுத்திவிடும். தன்னாட்சிகொண்ட அதிகார அமைப்புகளாக இருப்பதற்கு மாறாக, அரசின் அமலாக்கக் கரங்களாக அவை சுருங்கிவிடும்.*

*மாநில கடற்கரை மண்டல மேலாண்மை அதிகார அமைப்புகள் (SCZMAs) இரண்டு செயல்பாடுகளையும்மேற்கொள்ளும் அளவுக்கு வலுப்படுத்தப்பட வேண்டும் என்று* NFF *விரும்புகிறது. SCZMAக்கள் பலன் தரும் வகையில் அமைய வேண்டும் என்றால், அவற்றில் யார் அங்கம் வகிக்கப்போகிறார்கள் என்பதைப் பரிசீலிக்க வேண்டும். மீனவ சமூகத்தினர், கடற்கரையோரம் வாழும் பிற மக்கள் மற்றும் சுற்றுச்சூழல்வாதிகள் போதுமான அளவுக்கு SCZMAக்களில் அங்கம் வகிக்க வேண்டும். போதுமான அளவுக்கு நிதியும் மனிதவளமும் ஒதுக்கப்படுவதில்லை என்பது SCZMAக்களின் மற்றொரு முக்கியமான பலவீனம். இதனைச் சரிசெய்ய வேண்டும்.*

**7.1.3 *SCZMA*க்களின் திறனை மேம்பத்துங்கள்; தகவல் ஆதாரங்களைக் கட்டமையுங்கள்; அறிவியல் திறனை வலுப்படுத்துங்கள்.**

*ஒப்புக்கொள்கிறோம்.*

*அறிவியல் அறிவுடன் மக்களின் மரபான அறிவும் உள்ளூர் தகவல்களும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்று* NFF *விரும்புகிறது.*

**7.1.4 அனைத்து *CRZ* தடைநீக்கம் (clearance) மற்றும் *EIA* தடைநீக்கம் வலைத்தளத்தில் வெளியிடப்படும். அரசு இதற்கு உடன்படவேண்டும்.**

*ஒப்புக்கொள்கிறோம்.*

*கடற்கரைகளில் அமையும் (தொழில்) திட்டங்கள் பற்றிய அனைத்துத் தகவல்களும் சமூகப் பொது வெளியில் கிடைக்க வேண்டும் என்று* NFF *கோருகிறது. தொழில் இரசியம் என்ற பெயரில் மறைக்கப்படும் விரிவான திட்ட அறிக்கையும்* (detailed project reports - DPRs) *பொதுத்தகவல் தளத்தில் கிடைக்க வேண்டும். இவ்விவரத்தை மறைப்பது திட்டத்தின் தாக்கத்தைப் பற்றிய சுதந்திரமான மதிப்பீட்டைக் கடினமாக்கிவிடுகிறது. இதன் காரணமாக, திட்டத்தை அமுலாக்கம் செய்பவர்களே பிறரை நியமித்து, மோசமான முறையில் தயாரிக்கப்பட்ட அல்லது விவரங்கள் மாற்றியமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளையே* (EIA reports) *நாம் சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது.*

**7.1.5. சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தை** (EPA), *குறிப்பாக சட்டப்பிரிவு 21 மற்றும் 22ஐத் திருத்தி, தண்டனைகளைக் கடுமையாக்குங்கள்.*

*ஒப்புக்கொள்கிறோம்.*

*மேலும், தண்டனையைப் பொறுத்த வரை மற்ற சட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கும்,* EPA *சட்டப்பிரிவு 24(2) நீக்கப்பட வேண்டும் என்று* NFF *கோருகிறது.*

**7.2 CRZ ஐத் திருத்துவதன் மூலம் மீனவர்களின் குடும்பத்தின் வாழிட மற்றும் வாழ்வாதார பாதுகாப்பை மேம்படுத்துங்கள்.**

*ஒப்புக்கொள்கிறோம்.*

**7.2.1 தனியொரு இல்லத்தின் *FSI* அளவை அதிகப்படுத்துவதற்காக *CRZ III* நிபந்தனைகளை திருத்துங்கள்.**

*ஒப்புக்கொள்ளவில்லை.*

*இதுதொடர்பான குழுவின் பரிந்துரை பலவீனமானதாக இருக்கிறது என்று* NFF *கருதுகிறது. இப்பரிந்துரை CRZ III பகுதிகளுக்கு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. மீனவ சமூகத்தினர்* FSI *மாற்றப்பட வேண்டும் என்று மட்டும் கேட்கவில்லை. அவர்களின் கடற்கரைப் பகுதிகளில் அமைந்துள்ள குடியிருப்பிடம், வாழ்வாதாரம் தொடர்பான இடங்கள், சமூக மற்றும் பண்பாடு தொடர்பான இடங்களின் மீதான அவர்களின் உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் மீனவ மக்கள் கோருகிறார்கள். அவர்கள் தங்களின் வேலையிடத்தின் அருகே வீடு அமைத்துக்கொள்ள உரிமை கோருகிறார்கள். மேலும், மீனவ மக்களுக்கு வீடு அமைப்பதில் உள்ள சில நியாயமான கட்டுப்பாடுகளைத் தவிர அற்ற அனைத்துக் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட வேண்டும் என்று கோருகிறார்கள்.*

*அனைத்து மீனவக் குப்பங்களும்* CRZ*ன் கீழ் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் விசேஷ பாதுகாப்புப் பெற்றவை ஆக வேண்டும் என்றும்* NFF *கோருகிறது. பிரதான இந்திய நிலப்பகுதியின் கடற்கரையில் 3202 மீனவக் கிராமங்கள் இருப்பதாகக் கணக்கிட்ட* CMFRI *யின் 2005 ஆம் கணக்கெடுப்பை இதற்கான அடித்தளமாக அமையலாம். ஆனால், மேற்கண்ட கணக்கெடுப்பில் சில கிராமங்கள் விடப்பட்டுவிட்டன என்பதையும் மீன் இறக்குமிடங்கள் கணக்கில் சேர்க்கப்படவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆற்று முகத்துவாரங்களைச் சார்ந்த (சுந்தரவனம், கோதாவரி) மற்றும் பாலைவனம் சார்ந்த (கட்ச்) இடங்களில் உள்ளது போல 500 மீட்டர் தொலைவிற்கு அப்பால் உள்ள பகுதிகள் கூட கருவாடு போடுதல், வலைகளைச் சரிசெய்தல், படகுகளைப் பழுதுபார்த்தல் போன்றவற்றிற்காகத் தேவை என்பதால் மீனிறக்குத் தளங்களின் பாதுகாப்பு என்பதில் அவையும் அடங்கும்.*

*இதுநாள் வரை 0 முதல் 500 மீட்டர் வரை கட்டப்பட்ட மீனவ மக்களின் வீடுகள் முறைமைப்படுத்தப்பட்டதாக ஏற்க வேண்டும் என்று* NFF *முன்வைக்கிறது. புதிய வீடுகளுக்கு பின்வரும் நடைமுறை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும்* NFF *முன்வைக்கிறது.*

?? *குறைந்தபட்ச நிபந்தனைகளின் கீழ் வீடுகளைக் கட்டிக்கொள்ள அனுமதிக்கும் அதிகாரம் மீனவ சமூகத்தின் மரபு பஞ்சாயத்திற்கு அளிக்கப்பட வேண்டும்.*

?? *0 முதல் 50 மீட்டர் வரையிலான பரப்பு தாக்கம் தணிக்கும் பரப்பாகக்* (buffer zone) *கருதப்படும். அங்கே புதிய வீடுகள் எவையும் கட்டப்படக் கூடாது.*

?? *தற்போதைய தரைத்தளம் + 1 தளம் கொண்ட, 9 மீட்டர் உயரம் கொண்ட வீடுகள் என்ற தற்போதைய விதி தொடர வேண்டும்.*

?? *மீனவ மக்களுக்கு மட்டும்தான்.*

### 7.2.2 *CRZ II* மற்றும் *III* பகுதிகளில் வாழ்வாதாரம் தொடர்பான நடவடிக்கைகளை அனுமதித்தல்.

ஒப்புக்கொள்கிறோம்.

*அனுமதிக்கத்தக்கவற்றின் பட்டியல் ஒன்றைத் தட்டிக்கொட்டி சரிசெய்வதைக் காட்டிலும் கூடுதலான ஒருங்கிணைந்த அணுகுமுறையை வாழ்வாதார உரிமைகள் கோருகின்றன என்று* NFF *கருதுகிறது. மீன் இறக்குதல், கருவாடு போடுதல், வலை பழுதுபார்த்தல், படகுகளை நிறுத்துதல்-பழுதுபார்த்தல் போன்றவை மீனவ மக்களின் மரபுரிமைகள், அவற்றை அனுமதிக்கத்தக்க நடவடிக்கைகளின் பட்டியல் என்பதாகக் கருதக்கூடாது. எப்படியானாலும், முன்னதாக முன்மொழியப்பட்டுள்ள மீனவ கிராமங்கள், குப்பங்கள் பயன்படுத்தும் அனைத்து கடற்கரை நிலத்தையும் அங்கீகரிப்பது, வரைபடமாக்குவது- உரிமை என்ற கோணத்தில் அணுகுவதைப் பலப்படுத்தவே செய்யும்.*

7.2.3 மீனவர்களின் உரிமைக்கான சட்டம்

*ஒப்புக்கொள்கிறோம்.*

*ஆனபோதும், இந்திய அரசு அல்லது அமைச்சரகம் புதிய சட்டத்தின் நோக்கெல்லை (scope) இலக்கு (objectives) மற்றும் அணுகுமுறை பற்றிய விஷயங்களை வெளியிட வேண்டும், நேரடியாக சட்டமொன்றை வடிவமைப்பதை நோக்கித் தாவிவிடக்கூடாது.*

**7.3 மும்பையின் குறிப்பான உள்ளூர் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான திருத்தங்கள்**

*ஒப்புக்கொள்ளவில்லை.*

*குழு இதனைப் பரிந்துரைக்கவில்லை என்றும் சாத்தியமான தீர்வுக்கான வழியொன்றைச் சொல்கிறது என்றும் NFF உணர்கிறது. மும்பைக்கான சிறப்பு கையாளுதல் ஒன்றை நாங்கள் பின்வரும் அடிப்படையில் எதிர்க்கிறோம்.*

?? *அது மும்பைக் கடற்கரையை மேலும் பாதகமான நிலைக்குத் தள்ளிவிடும். கடற்கரை உயிர்ச்சூழலில் மிச்சம் மீதம் இருக்கும் உற்பத்தித் திறனையும் அழித்துவிடும்.*

?? *தற்போது மும்பைக் கடற்கரை எதிர்கொள்ளும் நெருக்கடியைப் பார்க்கும்போதும், எதிர்கால அபாயமாக இருக்கும் கடல் மட்டம் உயர்வை வைத்துப்பார்க்கும்போதும் மும்பைக் கடற்கரையின் சுமையைக் குறைப்பது முக்கியமானதாகும்.*

?? *இது மீனவ சமூகத்தினருக்கும் ஏனைய ஏழைகளுக்கும் உதவியாக இருப்பதைக் காட்டிலும், கட்டுமான முதலாளிகளுக்கேப் பயன் அளிக்கும்.*

*CRZ பகுதிக்குள் பழைய கட்டிடங்களில் வாழ்ந்துவரும் மக்களுக்கு உதவுவதற்கு ஏனைய படைப்பூக்கமுள்ள வழிகளை சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகம் கண்டடைய வேண்டும் என்று NFF ஆலோசனை வழங்குகிறது. மும்பை நகர்ப்புர வளர்ச்சியால் இடப்பெயர்ச்சிக்கு ஆளான மீனவ மக்களுக்குப் போதுமான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்றும், அவர்களின் குடியிருப்புரிமை முறையாகத் தீர்க்கப்பட வேண்டும் என்றும் NFF கோருகிறது.*

**7.4 கடற்கரையில் துறைமுகங்கள் பல்கிப்பெருகுவதைக் கட்டுப்படுத்துதல்; ஒட்டுமொத்தத் தாக்கத்தைக் கவனத்தில் கொள்ளுங்கள்.**

*ஒப்புக்கொள்கிறோம்.*

**7.4.1 ஒட்டுமொத்த விளைவுகளையும் துறைமுங்களையும் படித்தராய்வது; தற்போதைய துறைமுகங்களை விரிவாக்கம் செய்வதைத் தற்காலிகமாகத் தடைசெய்வதும் அதுவரை புதியத் திட்டங்களைத் துவக்குவதும்.**

*ஒப்புக்கொள்கிறோம்.*

*கடற்கரையின் ஒட்டுமொத்த ஆரோக்கியம் பற்றி எந்தக் கவலையும் இன்றி அராஜகமான முறையில் கடற்சுவர்களையும் அலைத்தடுப்புச் சுவர்களையும் கட்டுவதை நிறுத்த வேண்டும் என்று NFF கோருகிறது. மிக மோசமான முடிவுகளை எடுப்பதைக்*

*குறைப்பதற்கு, தேசிய கடற்கரை பாதுகாப்பு பற்றி படித்தாராய்ந்து வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்வது தேவையானதாக இருக்கிறது.*

**7.4.2 கடல் மீதும் கடலுக்கும் நிலத்திற்கும் இடைப்பட்ட பரப்பிலும் துறைமுகங்களால் ஏற்படும் தாக்கங்களை கட்டுக்குள் கொண்டுவர கடல் நோக்கிய பகுதியையும் CRZ–க்குள் கொண்டுவர வேண்டும்.**

*ஒப்புக்கொள்கிறோம்.*

**7.4.3 எவ்வித மாசுபாடு சுமையையும் அதிகப்படுத்தாமல் துறைமுகங்களை விரிவாக்கம் செய்ய அனுமதிக்கும் EIA அறிவிக்கை திருத்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்,**

*ஒப்புக்கொள்கிறோம்.*

*கடற்ரையில் அமையவிருக்கும் அனைத்துத் திட்டங்களுக்கும் பொருந்தி வரும்படி EIA அறிவிக்கைக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று NFF ஆலோசனை சொல்கிறது.*

**7.5 கழிவு நீர் வெளியேற்றத்திற்கு கடுமையான தர நிர்ணயங்கள் செய்யப்பட வேண்டும். கடலுக்குள் நீரடி குழாய் கட்டமைப்புகளை அனுமதிக்கக் கூடாது. வலுவான கண்காணிப்புத் திட்டம்.**

*ஒப்புக்கொள்கிறோம்.*

*இதனை கடலுக்கு மட்டும் பொருத்தாமல் அனைத்து கடற்கரை நீர்நிலைகளுக்கும் பொருத்த வேண்டும் என்று NFF ஆலோசனை சொல்கிறது.*

**7.6 ஆழமான ஆய்வுகள் மற்றும் கலந்தாலோசனைகளுக்குப் பின்பு அந்தமான நிக்கோபர், நிர்கோபார் அது போல லட்சத்தீவுகளில் புதியதொரு நிர்வாக முறை கொண்டுவரப்பட வேண்டும்.**

*ஒப்புக்கொள்கிறோம்.*

**7.7 மீனவக் குடும்பங்களுக்கு என்ன விளைவு ஏற்படும் என்பதை மிகவும் கவனமாகவும் ஆழமாகவும் புரிந்துகொண்டபின்னரே மிகுந்த பாதிப்புக்கு ஆளாகக் கூடிய பகுதிகளில் எந்தவித பாதுகாப்பு கட்டமைப்பும் அறிமுகம் செய்யப்பட வேண்டும்.**

*ஒப்புக்கொள்கிறோம்.*

*குழு, மிகுந்த பாதிப்புக்கு ஆளாகக் கூடிய கடற்கரைப் பகுதி என்ற கருத்தாக்கத்தை பரிந்துரைக்கவில்லை என்றும் புதிய வகையினங்களை, பாதுகாப்பு கட்டமைப்புகளை உருவாக்கும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கருதுகிறது என்றும் NFF புரிந்துகொள்கிறது.*

*முக்கியத்துவம் வாய்ந்த வாழிடங்களை CRZ-I பகுதி என்று குறிக்கப்படுவதே, போதுமான பாதுகாப்பை வழங்குகிறது என்றும் இன்னும் கூடுதல் நம்பத்தகுந்த அமுலாக்கம் தேவையில்லை என்றும் NFF நம்புகிறது.*

**மீனவர்கள் நலனையும் கடற்கரைப் பாதுகாப்பும் ஒன்றோடு ஒன்றானது;ஜம்புதீப் பிதார்கனிகாவில் நடைபெற்ற கடந்தகால தவறுகளில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.**

*ஒப்புக்கொள்கிறோம்.*

*ஜம்புதீப் மற்றும் பிதார்கனிகாவின் சூழலை மதிப்பீடு செய்ய வேண்டும் என்றும் பறிக்கப்பட்ட அல்லது குறைக்கப்பட்ட வாழ்வாதார உரிமைகளை திரும்பத்தரவேண்டும் என்றும் NFF கோருகிறது.*

**7.8 தெளிவான வறையறைகளின்படி அலையாத்திக்காடுகளின் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும். அலையாத்தி வளர வாய்ப்புள்ளபகுதிகள் மற்றும் சீரழிந்த அலையாத்திப் பகுதிகள் ஆகியவை அலையாத்தி வனப்பகுதிகளின் வரைபடத்தைத் தயார் செய்வதில் இணைக்கப்பட்டதாக இருக்க வேண்டும்; அலையாத்திகளை மீட்டெடுக்கும் திட்டம் வேண்டும்.**

*ஒப்புக்கொள்கிறோம்.*

*அலையாத்தி சுற்றுசூழலமைப்பு தாவரங்களை மட்டுமல்ல, சேற்றுப்பகுதியையும் தாவரங்களுக்கு இடையிலான வெற்றிடத்தையும் உள்ளடக்கியதே. மகாராஷ்டிரத்தில் பயன்படுத்தப்படும் 'மங்கள்' என்ற வார்த்தை அலையாத்தியை மட்டுமே குறிப்பிடும் மாங்குரோவ் என்ற வார்த்தையைக் காட்டிலும் சிறப்பாக இவ்வுயிர்ச்சூழலைப் பிரதிபலிக்கிறது.*

*பாதுகாப்பு என்ற பார்வையில் இருந்து CRZ-I பகுதிக்குள் வரும் முக்கியமான பிற உயிர்ச்சூழல் அமைப்புகளான அலைகோடுகளுக்கு இடையிலான பகுதியும் (inter-tidal zones) மணற்குன்றுகளும் சமமான முக்கியத்துவம் பெற வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். மேற்கு வங்கக் கடற்கரை, கட்ச் கடற்கரை போன்ற வடக்குப் பகுதி கடற்கரையின் அலைகோடுகளுக்கு இடையிலான பரப்பு சில இடங்களில் 10 கி.மீ வரை அகலமானதாக இருக்கிறது. அவை வளமான மீன்பிடிப் பகுதிகளாகவும் இருக்கின்றன. துறைமுகங்கள், பிற கடற்கரை கட்டமைப்புகளை உருவாக்கும்போது அவை புறக்கணிக்கப்படுகின்றன. மணற்குன்றுகள் கடற்கரைப் பாதுகாப்பில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. அவை அலையாத்தியைக் காட்டிலும் வெகு நீண்ட பரப்பைப் பாதுகாக்கின்றன. மணற்குன்றுகளை வளர்த்தெடுப்பதும் சாத்தியம்தான் என்பதை நாகை மாவட்டத்தின் பொய்கைநல்லூர் விவசாய மக்கள் செய்து காட்டியுள்ளனர்.*

**7.9 மீனவ மக்களின் வாழ்வாதாரத்தின் மீது எந்தக் கட்டுப்பாடும் விழாத அளவுக்கான பாதுகாப்பு முறைகளையும் இணைத்ததாக நடப்பிலுள்ள மற்றும் எதிர்காலஅபாயங்களுக்கு எதிராக கடலை நோக்கிய பரப்பின் பாதுகாப்பு இருக்க வேண்டும்.**

*ஒப்புக்கொள்கிறோம்.*

*கடல் நோக்கிய பரப்பை நிலத்தின் வகையினங்களுடன் (CRZ I, II and III) செயற்கையாக இணைக்கப்படக்கூடாது என்று NFF முன்வைக்கிறது. அதற்கு தனியானதொரு இடம் கொடுக்கப்பட வேண்டும். அதில் அனுமதிக்கப்படக்கூடிய செயல்பாடுகள் பற்றி கவனத்துடன் சிந்திக்க வேண்டும்.*

*7.10 ஆராய்ச்சியையும் கட்டுப்படுத்தும் ஆற்றலையும் மிகப்பெரும் அளவுக்கு வலுப்படுத்தும் நடவடிக்கைகள் அனைத்து மட்டங்களிலும் அறிமுகம் செய்யப்பட வேண்டும்.*

*ஒப்புக்கொள்கிறோம்.*

**கடற்கரை மண்டல மேலாண்மைக்கென புதிய நிறுவனம் ஒன்று கட்டமைக்கப்பட வேண்டும். நிலைத்த கடற்கரை மேலாண்மைக்கான தேசிய வாரியம் ஒன்றை அமைக்க வேண்டும்.**

*ஒப்புக்கொள்ளவில்லை.*

*இது கடற்கரை மேலாண்மை மண்டல (CMZ) அறிவிக்கையின் புதிய வடிவம் என்று* NFF *கருதுகிறது.*

**7.11 எதிர்கால அபாயங்களான கடல் மட்டம் உயர்வு, கடற்கரை பாதிக்கப்படுவது அதிகமாவது ஆகியவற்றிற்கு ஈடுகொடுக்கும் வகையில் புதிய கொள்கைகளை கொண்டுவர வேண்டும். பாதிப்புக்கு ஆளாகும் நிலை கோடு, அபாய நிலை கோடு** (vulnerability and hazard line) **குறிக்கப்பட வேண்டும்.**

*பாதிப்புக்கு ஆளாகும் நிலை கோடுக்கான முன்வைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை.*

*இதற்குப் பொருள்* CMZ *புறக்கடை வழியாக உள்நுழைவது என்று* NFF *பார்க்கிறது. மேலும் வளஆதாரங்களைத் தவறாகப் பொருத்துவது என்று பொருளாகும் என்றும்* NFF *கருதுகிறது. கடற்கரை முழுமைக்கும் உயரலைக் கோட்டைக்* (HTL) *குறிப்பது அதனை விடவும் முக்கியமானதாகும். இந்தப் பணி கடந்த 18 ஆண்டுகளாகப் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. உயரலையைக் குறிப்பது அமலாக்கத்திற்கு ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தொழில்களை நிறுவுபவர்கள் கோரிக்கைக்கிணங்க உயரலைக்கோடு குறிக்கப்பட்டிருந்தாலும் அது சந்தேகத்திற்கிடமான ஒன்றாகவே இதுநாள் வரை இருந்து வருகிறது. இந்தியாவின் முழு கடற்கரைக்கும் உயரலைக்கோட்டைக் குறிப்பதற்கான சுற்றுச்சூழல் வனத்துறையின் முயற்சி மிகவும் அவசர அவசியமான ஒன்றாக இருக்கிறது.*